# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் நார்வேயிலுள்ள பைத்துந் நாஸர் பள்ளிவாயிலில் 30.09.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

நீண்ட காலமாக காத்திருந்த பிறகு நார்வேயின் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இன்று ஒரு பள்ளிவாசலைத் திறப்பதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. எவ்வாறு இந்த பள்ளிவாசலைக் கட்டுவதற்கு மிக நீண்ட கால அவகாசம் தேவைப்பட்டது போன்று இதன் துவக்க நிகழ்ச்சிக்காகவும் நீங்கள் காத்திருக்க வேண்டியது வந்தது. ஆனால் இந்த சம்பிரதாய துவக்க நிகழ்ச்சியும் கூட நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றோம் என்பதை உலகத்திற்கு வெளிப்படுத்திக் காட்டுவதற்கே வைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், பள்ளிவாசல்களுக்கு இந்த சம்பிரதாய துவக்க நிகழ்ச்சிகள் இல்லாமல் பள்ளிவாசல் முழுமை பெறாது என்று கூறும் வகையில் எந்த தொடர்பும் இல்லை.

இன்று இங்கு நான் வந்திருப்பதும், ஜுமுஆ தொழுகையை தொழ வைப்பதும், குத்பா கொடுப்பதும், மற்றவர்களுடன், விருந்தாளிகளுடன் மாலையில் பள்ளிவாசலின் துவக்க நிகழ்ச்சியில் பங்கு பெறுவதும் நார்வேயிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இந்த பள்ளிவாசலின் வடிவில் அல்லாஹ் வழங்கியுள்ள அருள்களுக்கு நன்றி செலுத்துவதற்காகவே ஆகும். அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்தியவாறு எடுத்துக் கூற வேண்டும் என்பதும் அல்லாஹ்வின் கட்டளையாக இருக்கின்றது. அதன் விளைவாக இந்த நன்றி செலுத்துதலின் விளைவாக ஒரு மூஃமினுடைய உள்ளத்தில் அல்லாஹ்விற்காக உருவாகின்ற நன்றியுணர்வு மேலும் அல்லாஹ்வின் அருள்களுக்கும் அருட்கொடைகளுக்கும் நம்மை வாரிசாக்கி விடுகின்றது. தொழுகைகளை இங்கு தொழுவதன் மூலம் நாம் ஒரு வகையில் நன்றி செலுத்துகின்றோம். இந்த பள்ளிவாசலை நிரப்புவதன் மூலம் அதை நாம் செய்கின்றோம். இன்னொரு நன்றி செலுத்துதல் வெளிப்படையான முறையிலும் உள்ளது. அது விருந்தினர்கள் இங்கு வந்து வரவேற்பில் கலந்து கொள்வதன் மூலம் வெளிப்படுகின்றது. அல்லது பள்ளிவாசலின் துவக்கத்திற்கான அறிவிப்பின் மூலம் அது வெளிப்படுகின்றது.

ஆனால், உண்மையான நன்றியுணர்வு பள்ளிவாசலை நிரப்புவதற்குரிய உரிமையை செலுத்துவதில்தான் இருக்கின்றது. இந்த முக்கியமான விஷயத்தை ஒவ்வொரு அஹ்மதியும் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். பிறகு அல்லாஹ் இத்தகு உரிமையை நிறைவேற்றியதற்காக கூலியை வழங்காமல் விட்டுவிட மாட்டான். இதன் நற்கூலி எவ்வளவு அதிகமானதாக இருக்கும் என்றால் இவ்வுலகில் அதை கற்பனை செய்து பார்ப்பது, அதனை ஒரு எல்லைக்குள் கொண்டு வருவது ஆகியவை மனிதனால் முடியாத காரியமாகும். பள்ளிவாசலை நிரப்புவதற்காகவும் பள்ளிவாசலுக்குரிய உரிமையை செலுத்துவதற்காகவும் பள்ளிவாசலுக்கு செல்பவர்கள் தொடர்பாகவும் ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எவர் காலையிலும் மாலையிலும் பள்ளிவாசலுக்குச் செல்வாரோ அல்லாஹ் அவருக்காக சுவர்க்கத்தில் தனது விருந்தோம்பலுக்கான ஏற்பாட்டை தயார் செய்துள்ளான்.

அல்லாஹ்வுக்காக பள்ளிவாசலுக்கு வருபவர்களுக்கு சுவர்க்கத்தில் அவர்களது விருந்தோம்பலுக்கான ஏற்பாடு செய்யப்படுகிறது. தினமும் ஐந்து வேளை இந்த விருந்தோம்பலுக்கான ஏற்பாடு செய்யப்படுகிறது. பிறகு எவர்கள் 40 அல்லது 50 அல்லது 60 வருடங்கள் உயிருடன் இருந்து தொழுகைகளை நிறைவேற்றுகின்றார்களோ அப்படிப்பட்ட விருந்தாளிகளுக்காக அல்லாஹ் எந்த அளவு

விருந்தோம்பலுக்கான ஏற்பாட்டை செய்துள்ளான்? இது ஒரு மனிதனின் கற்பனைக்கு அப்பாற்பட்ட விஷயமாகும்.

உலகில் நமது அன்பான ஒரு விருந்தாளி நம்மிடம் வந்தால் விருந்தாளி வந்தது தெரிந்ததுமே அவருக்குரிய விருந்தோம்பலுக்கான ஏற்பாடுகளை நாம் செய்ய ஆரம்பித்து விடுகின்றோம். அந்த விருந்தாளியுடன் நமக்கு எந்த அளவு அன்பும் தொடர்பும் இருக்குமோ அதற்கேற்ப அவருக்கு விருந்தோம்பல் செய்வதில் அதன் இறுதி எல்லையை அடைய நாம் முயற்சி செய்கின்றோம். நம்மிடமுள்ள வசதிகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டதாக இருக்கின்றது. ஆனால் எந்த இறைவனது வசதிகளுக்கு ஒரு எல்லை இல்லையோ, எவனது கருணைக்கும் ஒரு எல்லை இல்லையோ அவன் தன்னை வணங்குகின்ற அடியாருக்கு எந்த அளவு விருந்தோம்பலுக்குரிய ஏற்பாட்டை செய்வான்? இது மனிதனின் கற்பனைக்கு அப்பாற்பட்ட விஷயமாகும். எனவே இப்படிப்பட்ட விருந்தோம்பலுக்கான சந்தர்ப்பங்களைத் தேடுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இங்கு வசிக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் இந்த எண்ணத்துடன் இந்த பள்ளிவாசலுக்குரிய உரிமையைச் செலுத்துவதற்காக இருக்க வேண்டும் இன்ஷா அல்லாஹ். ஏனென்றால், இந்த உரிமையைச் செலுத்துவது ஒருபுறம் அல்லாஹ்வுடனுள்ள தொடர்பை வலுப்படுத்தி அவனது படைப்பினங்களின் உரிமையை செலுத்துவதன் பக்கம் அது நமக்கு கவனமூட்டுகிறது. ஒரு மூஃமின் மறுவுலகின் சுவர்க்கத்தைப் பெறுவதற்கு இறைவனது விருந்தோம்பலைப் பெறுவதுடன் இந்த உலகத்தையும் சுவர்க்கமாக்குவதற்கு அவர் முயற்சி செய்கின்றார். நான் ஏற்கனவே கூறியிருப்பது போன்று வெளிப்படையான நன்றியுணர்வையும் நாம் வெளிப்படுத்த வேண்டும். இந்த வெளிப்படையான நன்றியுணர்வு அந்த அழகான சமுதாயத்தை நிலைநாட்டுவதற்கான ஒரு முயற்சியாகவும் இருக்கின்றது. அது இந்த உலகையும் சுவர்க்கத்திற்கு ஈடானதாக ஆக்கக்கூடியதாக இருக்கின்றது. கடந்த இரண்டு நாட்களாக ரேடியோ, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் பல்வேறு சமயங்களில் என்னிடம் நேர்காணலை நடத்தியுள்ளனர். இதில் பல்வேறு கேள்விகளை அவர்களில் ஒவ்வொருவரும் என்னிடம் கேட்டார்கள். அதை தவிர பள்ளிவாசல் கட்டுவதற்கான நோக்கம் என்ன? இந்தப் பள்ளிவாசலை இங்கு ஏன் கட்டியுள்ளோம்? இங்கு என்ன நடக்கும்? இது தொடர்பான உங்களது உணர்வுகள் என்ன? என்பதைக் கேட்டு அறிவதிலும் அவர்களுக்கு ஆர்வம் இருந்தது. இந்த சுற்றுச்சூழலை அமைதி நிரம்பியதாக ஆக்குவதும் அதனை ஒருவர் மற்றவருக்காக வைத்திருக்கும் அன்பு நிறைந்த உணர்வுகளால் நிரப்புவதும் அதன் மூலமாக இந்த உலகை சுவர்க்கத்திற்கு ஈடானதாக ஆக்குவதும் ஓரிறைவனை வணங்குவதற்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகளை தமது வாழ்வில் வெளிப்படுத்திக் காட்டி உலகை அமைதி, சமாதானம், நிம்மதி ஆகியவற்றின் உறைவிடமாக ஆக்குவதுதான் இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டதற்கான நோக்கமாகும் என்ற பதிலைத்தான் நான் அவர்களுக்கு கூறியுள்ளேன். இந்த பள்ளிவாசலைக் கட்டியதோடு இந்த பள்ளிவாசல் இருக்கின்ற இந்த பகுதியில் இந்த நகரத்தில் இந்த நாட்டில் அன்பையும் நேசத்தையும் வளர்ப்பதற்குரிய பணிகளைச் செய்ய வேண்டியது இருப்பதால் இங்குள்ள அஹ்மதிகளுக்கு முன்பை விட அதிகமான பொறுப்புகள் இருக்கின்றது. இந்த மீடியாக்கள் இங்கு வந்தது; நம்மிடம் இன்டர்வியூ எடுத்தது, பத்திரிகைகள், டி.வி., ரேடியோ போன்றவைகள் சாதகமான முறையில் இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டிருப்பது தொடர்பாக குறிப்பிட்டிருப்பது ஆகியவை நம்மை மேலும் இறைவனுக்கு நன்றி செலுத்துவதன் பக்கம் கொண்டு செல்கிறது. அவ்வாறு கொண்டு செல்லவும் வேண்டும். அல்லாஹ் உங்களது தியாகங்களுக்குப் பதிலாக அதற்கான நற்கூலியை இந்த வடிவத்திலும் நமக்கு வழங்கியுள்ளான். அதாவது மீடியாக்களின் கவனமும் இதன் பக்கம் திரும்பியது. பொதுவாக நல்ல முறையில் அவர்கள் ஜமாஅத்தைப் பற்றியும் பள்ளிவாசலைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள்.

உலக அளவிலும் ஜமாஅத்திலுள்ள தூய உள்ளம் படைத்தவர்களின் தியாகங்கள் பற்றி கூறுவது அவர்களை மீண்டும் இறைவனுக்கு நன்றி செலுத்துவதன் பக்கம் கவனமூட்டுகிறது. இவ்வாறு நன்றி செலுத்துவதற்கான உரிமையை செலுத்தி மேலும் இறைவனது அருள்களைப் பெற வேண்டும். இது எப்படிப்பட்ட அருள்களின் வட்டமாக இருக்கின்றதென்றால் அது தனது வட்டத்தில் மட்டும் இருப்பதில்லை. மாறாக அலைகளின் வட்டம் போல் இவை பரவிக் கொண்டே செல்லும். தண்ணீரில் நீங்கள் ஒரு கல்லை எறிந்தால் அல்லது ஏதாவது ஒரு பொருளை எறிந்தால் ஒரு வட்டம் உருவாகும். சின்ன வட்டம், பெரிய வட்டம், அதற்கும்

பெரிய வட்டம் என்று அது பரவிக் கொண்டே செல்லும். ஆனால் அந்த வட்டத்திற்குள்ள இன்னொரு சிறப்பு என்னவென்றால் இந்த வட்டம் அதன் எல்லையை அடையும் போது அது முடிந்து விடாது. மாறாக மனிதன் தனது வாழ்நாளில் செய்கின்ற நன்மைகள் நீடிப்பது வரை இந்த வட்டம் பரவிக் கொண்டே செல்கிறது. மனிதனின் வாழ்க்கை முடிந்து விட்டால் மறுவுலகில் அல்லாஹ் இதில் மேலும் விரிவான நிலையை ஏற்படுத்திக் கொண்டே செல்வான். எனவே இந்த பள்ளிவாசல் இதனை நிரப்புபவர்களுக்காக எல்லையற்ற அருள்களையும் பரக்கத்துகளையும் கொண்டு வந்திருக்கின்றது. நாம் கட்டுகின்ற ஒவ்வொரு பள்ளிவாசலின் நோக்கமும் இதுவேயாகும். அவை எல்லையற்ற அருள்களையும் பரக்கத்துகளையும் கொண்டு வர வேண்டும். இந்த அருள்களையும் பரக்கத்துகளையும் சேகரிப்பது இங்கு வசிப்பவர்களின் பணியாகும். எந்த அளவு முயற்சி செய்து இவற்றை சேகரிப்பதற்கு நீங்கள் முயற்சி செய்வீர்களோ அந்த அளவு அருள்களை நீங்கள் பெற்றுக் கொண்டே செல்வீர்கள். இவ்வுலகிலும் மறுவுலகிலும் இந்த அருள்களைப் பெற்றுக் கொள்வீர்கள். திருக்குர்ஆனில் பள்ளிவாசலை நிரப்புபவர்கள் தொடர்பாக குறிப்பிட்டு ஒரு வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த வசனத்தை நான் ஓதினேன். அதன் பொருள் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் எவர்களுக்கு நம்பிக்கை இருக்குமோ அவர்களே அல்லாஹ்வின் பள்ளிவாசலை நிரப்புபவர்களாக இருப்பார்கள். அவர்கள் தொழுகைகளை நிலைநிறுத்துவார்கள். ஸக்காத் கொடுப்பார்கள். அல்லாஹ்வைத் தவிர யாருக்கும் அவர்கள் அஞ்சமாட்டார்கள். இத்தகையவர்கள் விரைவில் நேர்வழி பெற்றவர்களாக ஆகிவிடுவர்.

அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வது மிகவும் முக்கியமானதாகும். இது முதல் நிபந்தனையாக வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு ஈமான் கொள்வதாக நாவால் கூறுவது மட்டும் போதுமானதல்ல. மாறாக அல்லாஹ் ஈமானுக்கும், மூஃமின்களுக்கும் சில அடையாளங்களைக் கூறியுள்ளான். எதுவரை மூஃமினுக்குரிய நற்செயல்களைச் செய்வதற்கான முயற்சி இல்லையோ அதுவரை இஸ்லாத்தில் இணைவது மட்டும் ஒருவரை மூஃமினாக ஆக்க முடியாது. அரபு நாட்டிலுள்ள நாட்டுப்புறவாசிகள் வந்து நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம் என்று கூறிய போது அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து, நீங்கள் ஈமான் கொண்டுள்ளீர்கள் என்று கூறாதீர்கள். மாறாக நாங்கள் வெளிப்படையாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம்; கட்டுப்பட்டு நடக்கின்றோம் என்று கூறுங்கள் என்று கூறுகின்றான்.

அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் உண்மையான முறையில் கட்டுப்பட்டு நடப்பதை ஈமானின் அடையாளமாக அல்லாஹ் கூறியுள்ளான். நீங்கள் முஸ்லிம்கள் இல்லை என்று மற்ற முஸ்லிம்கள் நம்மைப் பார்த்து கூறுகின்றார்கள். ஆனால் நாமோ அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கட்டுப்பட்டு நடந்து காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்த முழுமையான கட்டுப்படுதல் நம்மை உறுதியான முஸ்லிம்களாகவும் உண்மையான மூஃமினாகவும் ஆக்குகின்றது. முஸ்லிம்களிலுள்ள ஏனைய பிரிவினர் நம்மை முஸ்லிம் அல்லாதவர்கள் என்று கூறிக்கொண்டே இருந்தாலும் இந்த கட்டுப்படுதலின் காரணமாக அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் இந்த கட்டளையின் காரணமாக நாம் உறுதியான மூஃமினாக இருக்கின்றோம். இன்று அஹ்மதிகள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். பிறகும் கூட அஹ்மதிய்யத்தை விட்டு அவர்கள் விலகுவதில்லை. அப்படியிருக்கும் போது நாங்கள் உண்மையான முஸ்லிம்களாக இருக்கின்றோமா அல்லது மற்றவர்கள் உண்மையான முஸ்லிம்களாக இருக்கின்றார்களா? நாங்கள் கலிமா கூறுகின்ற எவரையும் முஸ்லிம் அல்லாதவர் என்று கூறுவதில்லை. எல்லா விதத்திலும் கட்டுப்பட்டு நடந்து தங்களது ஈமானில் வலிமையை ஏற்படுத்துபவர்களைத் தான் திருக்குர்ஆன் உண்மையான முஸ்லிம்கள் என்று கூறுகிறது. மேலும் அவர் அதில் வலிமையை ஏற்படுத்திக் கொண்டே செல்ல வேண்டும். நிச்சயமாக இது அவரது ஈமான் அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கும். எதுவரை இதற்காக நாம் முயற்சிகளைச் செய்து கொண்டிருப்போமோ நன்மைகளில் முன்னேற முயற்சிகளைச் செய்து கொண்டிருப்போமோ அல்லாஹ்வும் அவனது தூதரும் கூறியுள்ள வழிகளில் செல்ல முயற்சி செய்து கொண்டிருப்போமோ அதுவரை நாம் மூஃமின்கள் மற்றும் உண்மையான முஸ்லிம்கள் ஆகியோரைச் சார்ந்தவர்களாக இருப்போம். நமக்கு எந்தவொரு மவ்லவி மற்றும் முஃப்தியின் பத்வாக்கள் அல்லது ஏதாவதொரு அரசாங்கத்தின் தீர்ப்பு நாம் மூஃமின்களாகவும் உண்மையான முஸ்லிம்களாகவும் இருப்பதற்கான சான்றிதழை வழங்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட சான்றிதழ் நமக்குத் தேவையும்

இல்லை. அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளுக்கேற்ப நடப்பதற்கு முயற்சி செய்வதுதான் நமது ஈமானின் மீது முத்திரையைப் பதிக்கும். எந்த அளவு நாம் முயற்சிகளைச் செய்து கொண்டிருப்போமோ அதுவரை இந்த முத்திரை பதிந்து கொண்டே இருக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

ஒரு உண்மையான முஸ்லிமின் செயல் அவரை அருட்கொடைகளுக்கு வாரிசாக்கும். அது ஒரு சில நல்ல செயல்களைச் செய்வதால் மட்டும் கிடைக்காது. மாறாக எல்லாவிதமான பொருத்தமான நற்செயல்களைச் செய்வதன் பக்கம் கவனம் இருந்தால் பிறகு மனிதன் உண்மையான மூஃமின் ஆக முடியும்.

நாம் காலத்தின் இமாமாகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்ற விஷயத்தில் மட்டும் நாம் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. இது போதுமானது என்று கருதக் கூடாது. ஏனைய முஸ்லிம்களை விட இறைவனுக்கும் தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பதில் நாம் ஒரு அடி முன்னேறியே இருக்கின்றோம். மாறாக இந்த வாழ்க்கையானது தொடர்ந்து முயற்சி செய்வது, அல்லாஹ்வின் திருப்தியைத் தேடுவது, ஈமானில் வளர்ச்சி அடைந்து கொண்டே செல்வது ஆகியவற்றிற்காக இருக்கின்றது. இதையே மனிதனின் பிறப்பின் நோக்கமாக அல்லாஹ் கூறியுள்ளான். இறைவனை வணங்க வேண்டும். அதில் முன்னேறிச் செல்ல வேண்டும். ஒரு மூஃமினால் ஓரிடத்தில் உட்கார முடியாது. அல்லாஹ் கூறியுள்ள மூஃமின்களுக்குரிய சிறப்பு அம்சங்கள் சிலவற்றை நான் உங்கள் முன்னால் எடுத்துக் கூறுகின்றேன்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

ஒரு மூஃமினின் மிகப்பெரும் அடையாளம் என்னவென்றால் அவர், எல்லாவற்றையும் விட அதிகமாக அல்லாஹ்வை நேசிப்பவராக இருப்பார். மார்க்கத்துடன் தொடர்பில்லாத ஒரு நபருக்குக் கூட இந்த விஷயம் தெரியும். எவர் மீது அளவு கடந்த அன்பு இருக்குமோ அவருக்காக மனிதன் என்னவெல்லாம் செய்கின்றான்.

ஒரு முஸ்லிம் தன்னிடம் ஈமான் இருப்பதாக வாதம் செய்யும் போது அவருக்கு அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு ஏனைய எல்லா நேசங்களை விடவும் மிகைத்து நிற்க வேண்டும். பிறகு உலகச் செல்வம், உலகத்தின் ஒளி, பொலிவு, உலகக் காரியங்களில் ஈடுபடுவது, சந்ததிகள், மனைவி, குடும்பம் ஆகிய அனைத்தும் இறைவன் மீதுள்ள அன்பிற்கு எதிரியில் அற்பமானதாக ஆகிவிடும். அவ்வாறு ஆகவும் வேண்டும். அல்லாஹ்வின் மீது இத்தகைய அன்பு உருவாகி விட்டால் அப்படிப்பட்ட நபரது இறைவணக்கமும் தூய்மையானதாக இருக்கும். இபாதத்தின் பக்கம் கவனம் உருவாகும் போது இந்த பள்ளிவாசலும், தொழுகை நடக்கின்ற சென்டர்களும், எதிர்காலத்தில் கட்டப்படும் பள்ளிவாசல்களும் நிரம்பியிருக்கும். உண்மையான முறையில் பள்ளிவாசல்களை நிரப்புவதாக அது அமையும். நமது உள்ளங்களில் இறைவன் மீதுள்ள அன்பை நாம் வெளிப்படுத்தும் போது நமது சந்ததிகளும் அதன் தாக்கத்தைப் பெறுவார்கள். பலரும் தங்களுக்கு சந்ததிகள் கிடைப்பதற்காக துஆ செய்யும்படி கூறுகின்றார்கள். அவர்கள் தமது முன்மாதிரியைக் காட்ட வேண்டும். அதன் விளைவாக அதன் தாக்கம் சந்ததிகளிடம் ஏற்படும் போது தலைமுறை தலைமுறையாக அல்லாஹ்வின் மீதுள்ள அன்பை வெளிப்படுத்துவது, பள்ளிவாசல்களை நிரப்புவது ஆகியவை நடந்து கொண்டே இருக்கும். இது நம்மீது கடமையாகும். இறைவனிடம் கொண்டுள்ள இத்தகைய நேசத்தை நாம் நம்மிடம் உருவாக்கி அதற்காக முயற்சி செய்வதுடன் நமது சந்ததிகள் மற்றும் தலைமுறைக்கும் இந்த சுவையை உணர வைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். இது நடந்து விட்டால் பிறகு இந்த எதிர்ப்புகள் எதிரிகளின் முயற்சிகள் அல்லாஹ்வின் அருளால் தாமாகவே மறைந்து விடும். இன்ஷா அல்லாஹ். ஏனென்றால் அடியான் இறைவனிடம் அன்பு கொள்ளும் போது இறைவன் அதை விட அதிகமாக அவனிடம் அன்பு கொள்கின்றான். தனது அடியாரின் எஜமானனாகவும் நண்பனாகவும் ஆகிவிடுகின்றான். எவருக்கு இறைவன் நண்பனாகி விடுகின்றானோ அவருக்கு இந்த தற்காலிக எதிர்ப்புகள் எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது. சில தீயவர்கள், அல்லது பெரியவர்களின் தூண்டுதலின் பேரில் சில சிறுவர்கள் கல்லெறிந்து பள்ளிவாசலின் கண்ணாடியை உடைத்துள்ளார்கள் அல்லது அசுத்தமான பொருள்களை எறிந்து விட்டு சென்றுள்ளார்கள். ஒன்று, இப்படி செய்து செய்து இவர்களே சோர்வடைந்து அமர்ந்து விடுவார்கள். அல்லது உங்களுக்கு

இறைவனோடு உள்ள தொடர்பைப் பார்த்து இவர்களில் உள்ள நல்ல இயல்பு கொண்ட மக்கள் தாமாகவே வந்து உங்களுடன் இணைந்து விடுவார்கள் இன்ஷா அல்லாஹ்.

இந்த பள்ளிவாசலைக் கட்டுவது உங்களது பணிகளின் இறுதி எல்லை அல்ல. மாறாக இதற்கு பிறகு மேலும் தங்களது நிலைமைகளின் பக்கம் பார்க்க வேண்டிய தம்மை ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. உங்களது இறைவனிடத்தில் உங்களுக்கு இருக்கும் அன்பின் தரத்தைப் பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. உங்களது சுற்றுச்சூழலில் இறைவன் மீதுள்ள அன்பை வெளிப்படுத்திக் காட்டுவதன் நோக்கம் இறைவன் மீதுள்ள அன்பிற்காக வேண்டி தியாகங்கள் செய்பவர்கள் ஒருபோதும் தோல்வி அடைவதில்லை என்பதை உலகத்திற்கு தெரிவிப்பதற்கேயாகும்.

இந்த சிறிய கல் வீச்சு அல்லது அசுத்தங்களை எறிவது அல்லது முழக்கங்களைச் செய்வது அல்லாஹ்வை சார்ந்துள்ளவர்களின் முன்னேற்றத்தில் ஒருபோதும் தடையாக இருந்ததில்லை. தடையாக இருக்கவும் முடியாது.

பள்ளிவாசலை நிரப்பக் கூடியவர்களின் முதலாவது அடையாளம் அவர்கள் அல்லாஹ்வின் மீது அன்பு கொள்வர் என்பதாகும். தனது ஈமானிலும், நிச்சய உறுதியிலும் அவர்கள் முன்னேறிக் கொண்டே செல்வர்.

பிறகு மூஃமின்களின் இன்னொரு அடையாளமாக அவர்கள் அல்லாஹ்வின் பக்கமும் தூதரின் பக்கமும் அழைக்கப்படும் போது அவர்களின் பதில், ஸமிஃனா வஅத்தஃனா – நாங்கள் கேட்டோம்; நாங்கள் அதை ஏற்றுக் கொண்டோம் என்றே இருக்கும். இவ்வாறு பதில் கூறுபவர்கள் தொடர்பாக, இவர்களே வெற்றி பெறக் கூடியவர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரில் கூறப்படும் கட்டளைகளை கேட்டதும் அதற்கு கட்டுப்பட்டு நடப்பதன் விளைவு வெற்றியாகும். இவ்வாறு கேட்பதும் அதற்கு கட்டுப்பட்டு நப்பதும் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள நாம் செய்ய வேண்டிய, செய்யக்கூடாத எல்லா விஷயங்களுக்கும் பொருந்தும். உதாரணமாக திருக்குர்ஆன் உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள அமானிதங்களுக்குரிய உரிமையைச் செலுத்துங்கள் என்று கூறுகிறது.

உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டிருப்பவை உங்கள் மீதுள்ள பொறுப்புகளாகும். ஒரு பொறுப்பு மனிதனிடம் ஒப்படைக்கப்படும் போது மனிதன் அதை நிறைவேற்ற முயற்சி செய்கின்றான். இவை உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள அமானத் ஆகும். அந்த பொறுப்பைச் செய்ய வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. பொறுப்பாளர்கள் இருக்கின்றார்கள். ஜமாஅத்திற்காக நேரத்தை ஒதுக்குவதும் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியவாறு தனது கடமைகளை நிறைவேற்றுவதும் ஜமாஅத்திலுள்ள நபர்களின் உரிமைகளைச் செலுத்துவதற்கு முயற்சி செய்வது ஆகியவற்றை பொறுப்பாளர்கள் செய்ய வேண்டும். இவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது உலகப் பதவிகள் அல்ல. அதில் மக்கள் தங்களது ஆற்றலின் ஆதிக்கத்தின் மூலம் பணிகளைச் செய்ய வைப்பார்கள். மாறாக பொறுப்பாளர்கள் உண்மையில் தொண்டர்கள் ஆவர். ஹதீஸிலும் சமுதாயத்தின் தலைவர் சமுதாயத்தின் தொண்டர் ஆவார் என்று வந்துள்ளது. இந்த தொண்டு உணர்வை வளரச் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. அப்போதுதான் எந்த தொண்டு எந்த அமானத் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதன் உரிமையை நீங்கள் செலுத்த முடியும்.

என்னிடம் சிலர் துஆவிற்காக கூறும்போது என்னிடம் இந்த இந்த பொறுப்புகள் உள்ளன என்று கூறுவார்கள். அப்போது பொதுவாக நான் அவர்களிடம் இந்த இந்த தொண்டுகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று கூறுங்கள் என்று கூறுவது உண்டு. மற்றவர்கள் தங்களை பொறுப்பாளர்கள் என்று கூறிக் கொள்ளட்டும். நீங்கள் உங்களை ஊழியர்களாகவே கருத வேண்டும். இவ்வாறு தொண்டு செய்வதற்கான சந்தர்ப்பத்தை நமக்கு தந்திருப்பது அல்லாஹ்வின் அருளாகும். ஏனென்றால் பொறுப்பு, பதவி என்று கூறும்போது நாம் பெரியவர்கள் என்ற நிலையை நாம் உணர்கின்றோம். நாம் பெரியவர்கள் என்ற நிலை உருவாவதற்கு நம்மை நாமே அதிகாரிகளாக கருதுகின்ற அந்த சிந்தனை நமது மூளையில் உருவாகி விடுகிறது. ஆனால் ஜமாஅத்தில் பொறுப்பு வகிப்பவர் தொண்டர் ஆவார். இதன் மூலமாகவே அவர்கள் கிலாஃபத்தின் உண்மையான ஊழியர்களாக ஆக முடியும்.

பொறுப்பாளர்களுக்கு கண்ணியமளிப்பது ஜமாஅத்திலுள்ள நபர்களின் கடமையாகும். நிச்சயமாக அது கடமையாகும். அவர்களுக்கு அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்பு இருப்பதன் காரணமாகவே அவர்கள் பொறுப்பாளர்களிடம் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்கின்றார்கள். ஒரு பொறுப்பாளருக்கு கீழ்படியாமல் இருந்து காலத்தின கலீஃபா அவர்களிடம் வெறுப்படைவதை அவர்கள் விரும்புவதில்லை.

எனவே எல்லா படித்தரத்திலுமுள்ள பொறுப்பாளர்களும் தங்களது பொறுப்புகளுக்குரிய உரிமையை சரியாகச் செலுத்த முயற்சி செய்வது அவசியமானதாகும். ஒவ்வொரு பொறுப்பாளரது பரிமாற்றம், பேசும் முறை, செயல் முறை, இபாதத்தின் தரம் ஆகியவை மற்றவர்களை விட வேறானதாக இருக்க வேண்டும். அதில் ஒரு வித்தியாசம் இருக்க வேண்டும். லஜ்னா பொறுப்பாளர்கள் உள்ளனர். உதாரணமாக, அவர்கள் பர்தாவைப் பேண வேண்டும் என்ற திருககுர்ஆனின் கட்டளை இருக்கின்றது. அதை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறில்லை என்றால் அவர்கள் தங்களது அமானத்துகளுக்குரிய உரிமையைச் செலுத்துவதில்லை. மற்ற கட்டளைகள் இருந்தாலும் ஆண்களுக்கு இடப்பட்டுள்ள கட்டளைகளை விட ஒரு கட்டளை அதிகமாக பெண்களுக்கு கூறப்பட்டிருப்பது பெண்கள் பர்தாவைப் பேண வேண்டும் என்பதாகும். நார்வே தொடர்பாக எனக்கு பர்தாவைப் பேணுதல் தொடர்பான புகார்கள் அவ்வப்போது எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஒரு சமயத்தில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களும் இதுபற்றி கடுமையாக எச்சரிக்கை செய்திருந்தார்கள். இவ்வாறு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களும் இது பற்றி புரிய வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பொறுப்பாளர்களாக இருக்கின்ற உங்களிடம் இப்போது கூட பர்தாவை பேணுவதிலுள்ள உயர்ந்த தரம் இல்லையென்றால், ஆண்களும் பெண்களும் சுதந்திரமாக ஒருவர் மற்றவரை சந்திக்கின்ற நிலை இருந்தால், ஒருவர் மற்றவரது வீட்டிற்கு பர்தா இல்லாமல் செல்வது – அங்கு சபைகளைக் கூட்டுவது அதுவும் ஒருவர் மற்றவரது உறவினராக இல்லாத நிலையில் இவர் எனது சகோதரர் இவரை நான் மாமா, சாச்சா என்றே அழைக்கின்றேன். எனவே, இவர் முன்னால் என்னை மறைத்துக் கொள்ள வேண்டிய தேவை இல்லை. அல்லது அப்படிப்பட்ட உறவை ஏற்படுத்திக் கொள்வது ஆகிய இவை அனைத்தையும் திருக்குர்ஆன் மறுக்கின்றது. ஒரு மூஃமினான பெண் பர்தாவைப் பேணுவதும் தனது அங்கங்களை மறைத்துக் கொள்வதும் கடமையாகும் என்று அது வலியுறுத்திக் கட்டளை இடுகின்றது. வெட்கத்தை வெளிப்படுத்துவது உங்களது மகிமையாகும். லஜ்னாவின் ஒவ்வொரு படித்தரத்திலும் உள்ள பொறுப்பாளர்கள் அவர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியின் அல்லது நகரத்தின் அல்லது நாட்டின் பொறுப்பாளர்கள் இருக்கும் நிலையில் அவர்கள் தமது பர்தாவை சரிசெய்து கொண்டால், தமது நடைமுறையை இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப அமைத்துக் கொண்டால் பிறகு ஒரு பெரும் பிரிவினர் மற்றவர்களுக்கு முன்மாதிரிகளாகத் திகழ்வார்கள். தங்களது சந்ததிகளுக்காகவும், தங்களது சுற்றுச்சூழலில் இருப்பவர்களுக்காகவும் அவர்கள் முன்மாதிரிகளாகத் திகழ்வார்கள். மற்ற விஷயங்களுடன் தனது பர்தாவிற்குரிய உரிமையையும் செலுத்தும்போதுதான் ஒரு லஜ்னா பொறுப்பாளர் தன்னிடமுள்ள அமானத்திற்குரிய உரிமையையும் செலுத்த முடியும். எனக்கு சிலரது பர்தாவின் நிலை அவர்கள் என்னை சந்திக்க வரும்போது தெரிந்து விடுகிறது. அவர்களது புர்காவைப் பார்க்கும் போது ஒரு நீண்ட காலகட்டத்திற்குப் பிறகு இவர் முகத்தை மறைத்து புர்கா அணிந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அதை அணிவதில் அவர்களுக்கு சிரமம் இருப்பது தெரிய வருகிறது. பொறுப்பாளர் மீதும் பொதுவான ஓர் அஹ்மதி பெண்ணின் மீதும் தனது அமானத்திற்குரிய உரிமையைச் செலுத்துவது கடமையாகும்.

இன்றைய நாட்களில் தங்களது எண்ணங்களில் புதிய சிந்தனைகளை வைத்திருப்பவர்கள் இப்போது பர்தாவின் தேவையில்லை என்று கூறி விடுகின்றனர். இவ்வாறு நம்மை மறைத்துக் கொள்ள வேண்டிய தேவை இப்போது இல்லை. இது பழைய கட்டளையாகும் என்று கூறி விடுகின்றனர். திருக்குர்ஆனின் எந்தவொரு கட்டளையும் பழையது அல்ல. இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ ஒரு குறிப்பிட்ட மக்களுக்கோ மட்டும் உரியதல்ல என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். கிலாஃபத்துடன் தங்களுக்கு தொடர்பு இருப்பதை அஹ்மதி ஆண்களும், பெண்களும் மிகவும் ஆர்வத்துடன் வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். எங்கு கிலாஃபத் தொடர்ந்து நீடிப்பது தொடர்பாக இறைவன் திருக்குர்ஆனில் கூறியுள்ளானோ அங்கு நற்செயல்களை அதற்கு

நிபந்தனையாகவும் வைத்துள்ளான். இறைவணக்கம், நற்செயல்கள் ஆகியவற்றை நிபந்தனையாக வைத்துள்ளான். சூரா நூரில் எங்கு இந்த வசனம் வருகின்றதோ அங்கு அதற்கு இரண்டு வசனங்களுக்கு முன்பாக நாங்கள் இதைச் செய்து விடுவோம். அதை செய்து விடுவோம் என்று வாதம் செய்யாதீர்கள். மாறாக, பொதுவாக கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைக்கேற்ப உங்களுக்கு கூறப்படும் விஷயங்களில் அவற்றிற்கு கட்டுப்பட்டு நடந்து அவற்றை செயல்படுத்த வேண்டும். திருக்குர்ஆன் மற்றும் தூதர் கூறும் கட்டளை ஆகியவை எடுத்துக் கூறப்படும் போது அதை உடனடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இது தொடர்பாக நான் பலமுறை விஷயங்களை வெளிப்படையாக நான் பேசியுள்ளேன்.

எங்கு ஆண்களுடன் பெண்களும் தங்களது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்துகின்றனரோ, தங்களது ஈமானில் முன்னேற முயற்சிகளைச் செய்கின்றார்களோ, அங்கு பெண்களுக்காக கூறப்பட்டுள்ள அந்த குறிப்பான கட்டளையையும் செயல்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இங்கு இதையும் தெளிவாக கூறி விடுகின்றேன். பர்தாவைப் பேணியவாறு தங்களை மறைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டளை பெண்களுக்கு கூறப்பட்டிருந்தாலும் தங்களது பார்வையை கீழ் நோக்கி வைக்க வேண்டும். கட்டுப்பாடின்றி ஆணும், பெண்ணும் சுதந்திரமாக சந்திப்பது ஆகியவற்றை தவிர்க்க வேண்டும் என்ற கட்டளை முதலில் ஆண்களுக்கும் பிறகு பெண்களுக்கும் கூறப்பட்டுள்ளது. திரை இல்லாத நிலையில் ஆண்கள் தங்களது பார்வையை பெண்கள் மீது செலுத்தக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

பிறகு நம்பி ஒப்படைக்கப்பட்ட அமானத்துகளில் ஓட்டுரிமையைச் சரியாக பயன்படுத்துவதும் அடங்கும். பிறகு இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்யப்பட்ட பைஅத் உடன்படிக்கைக்கு உரிய உரிமையை செலுத்த வேண்டியதுள்ளது. இதையும் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. அல்லாஹ் எவர்களிடம் எந்த அமானத்து ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அவரிடம் அது தொடர்பாக கேள்வி கேட்கப்படும் என்பதை மிகவும் தெளிவாகக் கூறியுள்ளான். பிறகு அல்லாஹ் நல்ல செயல்களைச் செய்யும் போது கர்வத்திலிருந்தும் தப்பித்துக் கொள்வது, பணிவை மேற்கொள்வது ஆகியவற்றின் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளான். நம்மிடம் இங்கு பெரும்பாலான சண்டைகள், பிரச்சனைகள், தற்பெருமை, அகங்காரம் ஆகியவற்றால் தான் பிறக்கின்றது. மனிதன் தனது நிலை பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தால் பிறகு எப்போதும் அவன் பணிவை வெளிப்படுத்தக்கூடியவனாக இருப்பான். இதனை மனிதன் மிகவும் அதிகமாக தன்னைத்தானே ஆய்வு செய்து பார்ப்பதன் மூலம் பெற முடியும். மற்றவர்கள் விஷயத்தைக் கூறும்போது சில நேரம் மனிதனுக்கு கோபம் வந்து விடுகிறது. வெறுப்பு ஏற்படுகின்றது. ஆனால், அவன் தன்னைத்தானே ஆய்வு செய்து பார்க்கின்ற பழக்கத்தை ஏற்படுத்தினால் இது மிகச்சிறந்த வழிமுறையாக இருக்கும். திருக்குர்ஆனின் கட்டளைகளை முன்னால் வைத்தவாறு நேர்மையுடன் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அல்லாஹ்வின் மீது அச்சம் இருந்தால் இதை செய்ய முடியும். நிச்சயமாக ஒவ்வொரு அஹ்மதிக்கும் அல்லாஹ்வின் மீது அச்சம் இருக்கின்றது. அவரது மனசாட்சியை அலசிப் பார்க்க வேண்டிய தேவை மட்டுமே இருக்கின்றது. இவ்வாறு மிகத் தெளிவாக அவர் இந்த ஆய்வை மேற்கொள்ளலாம். திருக்குர்ஆனை ஓதும்போது அல்லாஹ்வின் கட்டளைகளை சிந்திக்கின்ற பழக்கத்தை ஏற்படுத்துங்கள். இன்று இந்தச் சிறிய நேரத்தில் நான் அந்தக் கட்டளைகளின் விளக்கத்தை உங்களுக்கு கூற முடியாது.

ஒவ்வொருவரும் தாமாகவே தன்னை ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. திருக்குர்ஆன் ஒவ்வொரு வீட்டிலும் முறையாக ஓதப்படும்போதுதான் இதை நாம் செய்ய முடியும். அதைப் புரிந்து அதை செயல்படுத்த முயற்சி செய்ய வேண்டும். குழந்தைகள் தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்துகின்றார்களா? திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்துகின்றார்களா? என்பதைக் கண்காணிக்க வேண்டும். தான் ஈமான் கொண்டுள்ளதாக வாதம் செய்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் மறுமை நாள் மீதும் தனக்கு நம்பிக்கை இருந்தால்தான் தனது இந்த வாதம் முழுமை அடைய முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதில் அவருக்கு நிச்சய உறுதி இருக்க வேண்டும். மரணத்திற்குப் பிறகு ஒரு வாழ்க்கை உள்ளது. அந்த நாளில் இந்த உலகில் செய்த செயல்களுக்காக கணக்குக் கொடுக்க வேண்டியது வரும். அங்கு தான் இறுதி தீர்ப்பு இருக்கும் என்பதில் அவருக்கு உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும்.

அல்லாஹ் பள்ளிவாசல்களை நிரப்புபவர்களின் ஒரு அடையாளமாக அவர்களுக்கு மறுமையின் மீதும் நம்பிக்கை இருக்கும் என்று கூறுகின்றான். மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கை, உண்மை என்று கருதுகின்றனர். அதை உண்மை என்று கருதும்போது பள்ளிவாசலின் இபாதத்தை நிறைவேற்றுவதுடன் மற்ற கட்டளைகளையும் பேணி நடக்க முயற்சிகளைச் செய்கின்றனர். அதன் மூலமாக அவர்கள் இறைவனது அருள்களுக்கும், அருட்கொடைகளுக்கும் வாரிசாகி விடுகின்றார்கள்.

**பிறகு அல்லாஹ் கூறுகின்றான்:**

அவர்களுக்கு அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கை முழுமையாக இருந்தால் மறுமையில் இறைவனிடம் அவனது கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டும் என்ற உறுதி அவர்களுக்கு இருந்தால் மனிதன் தூய்மையான கலப்பற்ற தன்மையுடன் அல்லாஹ்வின் முன்னிலையில் குனிவான். தனது முழுமையான கவனத்துடன் இறைவனை வணங்குவான். ஹதீஸில் சிறந்த இபாதத் தொழுகையாகும் என்று வந்துள்ளது. மூஃமின்களுடைய ஜமாஅத் தொழுகைக்காக ஒன்றுசேரும் போது பிறகு எங்கு அவர்கள் இறைவனது ஏகத்துவத்தை வெளிப்படுத்திக் கூறுவார்களோ அங்கு ஒருவர் மற்றவருக்காக நல்லுணர்வு, ஜமாஅத் தொடர்பு, ஒற்றுமை ஆகியவற்றையும் ஏற்படுத்த வேண்டும் என்பதை வெளிப்படையாகக் கூறுவார். அல்லாஹ்விற்குரிய உரிமையை செலுத்துவதுடன் தொடர்புள்ள அல்லது அவனது படைப்பினங்களின் உரிமையுடன் தொடர்புள்ள எல்லா நற்செயல்களையும் செய்வதன் பக்கம் அவர்களுக்கு கவனம் ஏற்படும். அல்லாஹ்வின் தூதுச் செய்தியை பரப்புவதற்குரிய உரிமையை செலுத்துவதற்கும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதற்கும் எப்போதும் வசதிகள் தேவைப்படும். எனவேதான் பள்ளிவாசலை நிரப்புபவர்களின் அடையாளங்களில் ஒன்றாக அவர்கள் ஸக்காத் கொடுப்பவர்களாக இருப்பார்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். அவர்கள் பொருள் தியாகம் செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள். தங்களது செல்வங்களை அவர்கள் தங்களது எல்லைக்குள் மட்டும் வைத்திருக்கமாட்டார்கள்.

மாறாக மார்க்கத்திற்காகவும், படைப்பினங்களுக்குரிய உரிமையை செலுத்துவதற்காகவும் தங்களது செல்வத்தை அவர்கள் செலவு செய்வார்கள். இங்கு ஸக்காத் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருக்குர்ஆனின் மற்ற பல இடங்களிலும் தொழுகையுடன் பொதுவாக பொருள் தியாகம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மூலமாக மார்க்கத் தேவைகள் நிறைவேறுவதுடன் இவற்றிலிருந்து புறக்கப்பணிக்கப்பட்ட நிலையில் இருக்கும் பிரிவினரின் தேவைகளும் நிறைவேறும். பள்ளிவாசல்களைக் கட்டுபவர்களும் அதை நிரப்புபவர்களும் ஆகிய இந்த மக்கள் எழுவதும் உட்கார்வதும் படுப்பதும் ஆகிய அனைத்துமே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே இருக்கும். அவர்களது உள்ளத்தில் இறைவன் மீதுள்ள அச்சமும் பயமும் இருக்கும். அது இறைவன் மீது அவர்களுக்கு இருக்கும் அன்பின் காரணமாகத்தான் இருக்கும். பிறகு அச்சமும் பயமும் மேலும் அவர்களை நன்மையின் பக்கம் கொண்டு செல்கிறது. இப்படிப்பட்ட மக்களே நேர்வழியில் இருப்பவர்களாவர். அல்லாஹ் இவர்களை நேர்வழி பெற்றுக் கொண்டவர்களில் ஒருவராக கருதுகின்றனர்.

அல்லாஹ்வின் அருளால் நார்வே ஜமாஅத் பெரும் தியாகத்தைச் செய்துள்ளது. பள்ளிவாசலுக்காக ஏறக்குறைய 104 மில்லியன் குரோன்ஸை ஜமாஅத் செலவு செய்துள்ளது. ஆரம்ப செலவுகளை தலைமையகம் ஏற்றுக் கொண்டது. மற்ற செலவுகளை ஜமாஅத் தான் ஏற்று செய்துள்ளது. ஆனால் பள்ளிவாசல் கட்டுவதில் இவர்களுக்கு மிக நீண்ட காலம் தேவைப்பட்டது. ஆனால் 2005 -ல் நான் ஜமாஅத்திற்கு இதன் பக்கம் கவனமூட்டிய போது இதற்கு முன் குறைவான கவனம் செலுத்தப்பட்டிருந்தாலும் இதன் பக்கம் கவனமூட்டிய பிறகு அதிக கவனம் ஏற்பட்டுள்ளது. அந்த சமயத்தில் ஒருவர் தனது வீட்டை விற்று அந்த தொகையை இதற்காக கொடுத்துள்ளார். நான் எனது வீட்டை விற்கின்றேன் என்று அவர் எனக்கு எழுதியுள்ளார். ஒருவர் தனது காரை விற்று அந்தத் தொகையை பள்ளிவாசலுக்காக கொடுத்து விட்டார். ஒருவர் கூடுதல் நேரம் வேலை செய்து அல்லாஹ்வின் வீடு கட்டப்படுவதற்கும் நான் அதிகமாக சந்தா கொடுப்பதற்கும் அந்த தொகை செலவிடப்படுவதாக கூறினார். அல்லாஹ்வின் அருளால் பெண்களும் அதிகமாக தியாகங்கள் செய்துள்ளார்கள்.

சிலரது தொழில் முழுமையாக நடைபெறாமல் நின்று போன பிறகும் கூட அவர்கள் செய்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றியுள்ளனர். அல்லாஹ் தியாகங்கள் செய்த எல்லாரது பொருளிலும் உயிரிலும் எல்லையில்லா பரக்கத்துகளை வைப்பானாக! இன்றைய நிலைமைகளின் காரணமாக அவர்களது தொழில்களில் இழப்பு ஏற்பட்டுள்ளது. அல்லாஹ் அதிலும் பரக்கத்தை ஏற்படுத்துவானாக!

இந்த எல்லா தியாகங்களும் நாம் இந்த பள்ளிவாசலை நிரப்ப வேண்டும் என்ற சிந்தனையுடன் தான் செய்யப்பட்டு இருக்கும் என்று நான் நம்புகின்றேன். அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைக்கேற்ப அதை நீங்கள் நிரப்ப வேண்டும். உங்களது ஈமானில் முழுமைத் தன்மையை அடைய முயற்சி செய்வதுடன் உங்களிடத்தில் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தையும் பயத்தையும் உருவாக்கியவாறு இறை அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்த வேண்டும் என்ற சிந்தனையுடன நற்செயல்களைச் செய்வதற்கான உயர்ந்த தரத்தைப் பெற்றவாறு உங்களது குழந்தைகளிடம் பள்ளிவாசல் மீதும், இறைவன் மீதும் அன்பை உருவாக்க முயற்சி செய்தவாறு இக்காலத்தில் நம்மீது அல்லாஹ் அருள் செய்தவாறு அனுப்பியுள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரின் கைகளை வலுப்படுத்தியவாறு அவர்களது பிரச்சாரத்தை மேலும் பரப்புவதற்காக முழுமையாக முயற்சி செய்தவாறு இந்த தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்குரிய உரிமையைச் செலுத்த முயற்சி செய்தவாறு அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பதன் பக்கம் கவனம் செலுத்தியவாறு இந்தப் பொறுப்புகளை நாம் நிறைவேற்ற வேண்டும்.

எனவே இந்தப் பள்ளிவாசல் ஒரு மிகப்பெரும் பொறுப்பை நம்மீது சுமத்துகிறது. பள்ளிவாசலைக் கட்டி நாம் நம் மீதுள்ள பொறுப்புகளை இன்றும் விரிவானதாக ஆக்கி விட்டோம். இந்தப் பொறுப்பை நாம் நிறைவேற்றாமல் இருந்தால் பிறகு நாம் இறைவனின் அன்பின் பார்வையிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டவர்களாக ஆகிவிடலாம். அவ்வாறு எந்த சமயத்திலும் நடக்காமல் இருப்பதற்கு அல்லாஹ் உதவுவானாக! நார்வேயில் முதல் அஹ்மதிய்யா பள்ளிவாசல் கட்டப்பட்டிருப்பது எங்கு நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருக்கின்றதோ அங்கு அது நமக்கு கவலை அளிக்கக்கூடிய இடமாகவும் இருக்கின்றது. இந்த கவலையை முன்னால் வைத்தவாறு ஒவ்வொரு அஹ்மதியும் தனது கடமையை நிறைவேற்றுபவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக! தனது பொறுப்புகளை நிறைவேற்றுபவர்களாக அவர்கள் இருக்கட்டும். பெரும் பெரும் தொகையை செலவழித்து இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. இதனை அழகாக அவர்கள் அமைத்துள்ளார்கள். இலட்சக்கணக்கான குரோனஸ் செலவு செய்து இதில் ஒருவர் கார்பெட்டைப் போட்டுள்ளார். இன்னொருவர் இலட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் செலவு செய்து ஃபர்னிச்சர்களை வழங்கியுள்ளார். பள்ளிவாசலின் முழு காம்ப்ளக்ஸிற்காகவும் ஃபர்னிச்சர்களை வழங்கியுள்ளார். இவ்வாறு ஒருமுறை செய்யும் தியாகமாக இது இருக்கக் கூடாது. ஒருமுறை தியாகம் செய்து விட்டு அதில் இந்த மக்கள் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. இதன் அழகிய ஃபர்னிச்சர்கள் மற்றும் அழகிய அலங்காரம் ஆகியவற்றைப் பார்த்து விட்டு இது நமக்கு போதுமானது என்று நீங்கள் இருந்துவிடக் கூடாது. மாறாக இதன் உண்மையான அழகை நிலைநிறுத்துபவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். அது ஐவேளை தொழுகை மூலமாக உருவாகும். ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பள்ளிவாசல்கள் கட்டப்படுவது பற்றி கூறப்பட்டது. அப்போது அவர்கள் கூறினார்கள்:

பள்ளிவாசல்களின் உண்மையான அழகு கட்டிடங்களில் இல்லை. மாறாக அது தூய்மையான உள்ளத்துடன் அங்கு தொழுகின்ற தொழுகையாளிகளுடன் இருக்கின்றது. அவ்வாறு இல்லையென்றால் இன்று இந்த எல்லா பள்ளிவாசல்களும் ஏன் பாழடைந்து கிடக்கின்றன?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுத பள்ளிவாசல் சிறியதாக இருந்தது. ஈச்சமரத்துக் கிளைகள் மூலம் கூரை அமைக்கப்பட்டது. மழை பெய்யும் போது கூரையிலிருந்து தண்ணீர் விழும்.

பள்ளிவாசலின் பொலிவு அதன் தொழுகையாளிகளுடன் இருக்கின்றது.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் உலகவாதிகள் ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள். அது இறைவனது கட்டளைக்கேற்ப உடைத்து வீழ்த்தப்பட்டது. இந்த பள்ளிவாசலின் பெயர் மஸ்ஜிதே ஸிரார் அதாவது இழப்பை ஏற்படுத்தும் பள்ளி ஆகும். இந்த பள்ளிவாசல் கட்டப்பட்ட நிலம் மண்ணோடு மண்ணாக கலந்து விட்டது. பள்ளிவாசல்கள் தக்வாவிற்காக கட்டப்பட வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. இந்த இறையச்சத்தைத்தான் நாம் நம்மிடம் ஏற்படுத்த வேண்டும். இதைப் பற்றி மீண்டும் மீண்டும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் தக்வாவிற்கான போதனையைத்தான் தந்துள்ளது. இதுவே இதன் உயர்வான நோக்கமாக இருக்கின்றது. மனிதன் தக்வாவை மேற்கொள்ளாமல் இருந்தால் அவனது தொழுகைகளும் பயனற்றதாகவும் நரகத்தின் திறவுகோலாகவும் ஆகிவிடலாம். இதிலிருந்தே ஈமான் ஆரம்பமாகிறது. இதன் மூலமாகவே இதற்கு நீர் பாய்ச்சப்படுகிறது.

அதாவது தக்வாவின் மூலமாகவே ஈமானிய செடி வளர்ச்சி அடைகிறது. மேலும் நஃப்ஸின் உணர்வுகள் அடங்கி விடுகின்றன.

பிறகு கூறினார்கள்: இந்த இயக்கத்தை அல்லாஹ் தக்வாவிற்காகவே ஏற்படுத்தியுள்ளேன். ஏனென்றால் தக்வாவின் மைதானம் முற்றிலும் காலியாக இருக்கின்றது.

கூறுகின்றார்கள்: எவர்கள் இறையச்சத்தை மேற்கொண்டுள்ளார்களோ அவர்கள் நம்முடன் இருக்கின்றார்கள்.

அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் இந்த முக்கியமான பொறுப்பை புரியக் கூடியவர்களாக ஆக்கி வைப்பானாக!

ஷிர்க்கின் உறைவிடமாக இருக்கின்ற இந்த நாடுகளில் தக்வாவைப் பேணியவாறு நாம் நமது பொறுப்புகளை நிறைவேற்றவில்லை என்றால், நமது பைஅத்தின் நோக்கத்தைப் புரியாமல் இருந்தால் பிறகு நாம் அல்லாஹ்வின் பார்வையில் பிடிக்கப்படுவதற்கு தகுதியுடையவர்களாக ஆகி விடுவோம். அல்லாஹ் நம்மீது கருணை காட்டுவானாக! அவனது அன்பின் பார்வை விழுகின்ற அந்த அடியார்களுடன் நம்மை இணைப்பானாக!

மஸ்ஜித் நாஸர் –ன் கட்டுமானப் பணி, அது முழுமை பெற்றது தொடர்பான சில விபரங்களை நான் கூறுவேன்.

பள்ளிவாசல் நிலத்தின் முழு பரப்பளவு 9,563 சதுர மீட்டர் பள்ளிவாசல் கட்டிடத்தின் முழு பரப்பளவு 7,759 சதுர மீட்டர் ஆகும். பள்ளிவாசலின் ஆண்கள் தொழும் இடத்தின் முழு அளவு 8802 சதுர மீட்டர். ஏறக்குறைய 1400 பேர் தொழும் வசதி உள்ளது. கேலரியின் அளவு 298 சதுர மீட்டர். இதில் 500 பேர் தொழும் வசதி இருக்கின்றது. பெண்கள் தொழும் இடத்தில் 850 பேர் தொழுவதற்கான வசதி இருக்கின்றது. பிறகு கீழே ஒரு ஹாலும் கட்டப்பட்டிருக்கின்றது. முதலில் அந்த ஹால் கட்டப்பட்டு பிறகு நிறுத்தப்பட்டு ஒரு நீண்ட காலம் அதன் பணி முடியாமல் கட்டப்படாத நிலையில் அது இருந்தது. அதில் 850 பேர் தொழும் வசதி உள்ளது. இவ்வாறு ஒரு அப்பார்ட்மென்ட்டும் உள்ளது. மிஷன் ஹவுஸ் மற்றும் மிஷனரி ஹவுஸ் அதில் இருக்கின்றது. அதில் மூன்று படுக்கை அறை, பொருட்கள் வைக்கின்ற அறை என முழு வீடும் போதிய வசதிகளுடன் இருக்கின்றது – மாஷா அல்லாஹ்.

மஸ்ஜிது பைத்துந் நாஸர் –ல் மொத்தம் 2250 பேர் தொழ முடியும்.

ஹாலின் மேற்பகுதி மொட்டை மாடியாக பயன்படுத்தப்படுகிறது. கிளைமேட் நன்றாக இருந்தால் கூட்டம் அதிகமாக இருந்தால் மொட்டை மாடியில் ஏறக்குறைய 800 பேர் தொழ முடியும். பள்ளிவாசலின் மினாராவின்

உயரம் 21 மீட்டராகும். கலசத்தின் உயரம் 5 மீட்டராகும். இங்கு நூலகமும் உள்ளது. கிளை அமைப்புகள் மற்றும் ஜமாஅத்தின் அலுவலகங்களும் உள்ளன. லஜ்னாக்களுக்கு அவர்களுக்கென்று தனி நூலகமும் உள்ளது. நீண்ட காலமாக இந்த பள்ளிவாசல் கட்டுவதற்கான அனுமதி கிடைக்காமல் இருந்தது. கவுன்சிலின் ஒரு பிரச்சனை நடைபெற்று வந்தது. அங்கு ஒரு ரோடு இருந்தது. அதை சீர்செய்ய வேண்டியதிருந்தது. ஜமாஅத் மக்களது வசதிக்காகவும் நன்மைக்காகவும் பொதுநலனை கருத்தில் கொண்டு அந்த ரோடையும் சரிசெய்து கொடுத்துள்ளது. நடைபாதையையும் அமைத்துக் கொடுத்தது. நான் கூறியதுபோன்று மொத்தம் 104 மில்லியன் இதில் செலவாகியிருக்கின்றது.

ஓஸ்லோவ் ஏர்போர்ட்டிற்கு செல்கின்ற மெயின் ரோடில் நமது பள்ளிவாசல் இருக்கின்றது. நகரத்திற்கு வந்து செல்லும் போது இந்த பள்ளிவாசலின் காட்சி நமக்கு தெரியும். இது மிகவும் அழகிய காட்சியாக இருக்கின்றது. இது Six Motor Way –ல் அமைந்துள்ளது. தினமும் 80,000 வாகனங்கள் இந்த ரோடை கடந்து செல்கிறது. இங்கிருந்து Underground Bus Service –ம் இருக்கிறது. இந்த இடம் ஒரு தலைமை மையமாக இருக்கின்றது. இதனை அல்லாஹ் ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதில் அஹ்மதிகள் எத்தகைய உணர்வுகளைக் காட்டியுள்ளார்களே அதே உணர்வுடன் இந்தப் பள்ளிவாசலை நிரப்புவதற்கும் அல்லாஹ் உதவி செய்வானாக! அல்லாஹ் இந்தப் பகுதியிலுள்ள மக்களின் உள்ளங்களை திறப்பதற்கு இந்த பள்ளிவாசலை ஒரு வழியாக ஆக்கி வைப்பானாக! பொதுவாக உள்ளூர் மக்கள் இதனால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனால் இந்தப் பகுதியில் குடிபெயர்ந்துள்ள முஸ்லிம்கள் முல்லாக்கள் நம் மீது சுமத்துகின்ற தவறான கொடூரமான குற்றச்சாட்டுகளின் காரணமாக நம்மை எதிர்ப்பதில் அவர்கள் முன்னேறியுள்ளனர். இதனால் பள்ளிவாசல் கட்டப்படும் போது இங்கு அதனை உடைப்பதற்கான முயற்சிகள் நடந்தன. ஆனால் நாம் பொறுமையுடனும் துஆவுடனும் பணி செய்பவர்களாக இருக்கின்றோம். அவ்வாறே நாம் செய்து கொண்டிருப்போம் – இன்ஷா அல்லாஹ். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தம்மை தொடர்புபடுத்திக் கூறுபவர்களாக அல்லாஹ் அவர்களை ஸிராத்தே முஸ்தகீமின் நேரான பாதையில் கொண்டு வருவதற்காகவும் அவர்களுக்கு வழிகாட்டவும் துஆ செய்து கொண்டிருப்போம். முஸ்லிம் அல்லாதவர்களைப் பொருத்தவரை அவர்கள் மகிழ்ச்சி அடைந்திருந்தாலும் இவர்களது உள்ளம் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை ஏற்றுக் கொள்வதற்காக திறக்கும் போதுதான் நமது உள்ளங்கள் மகிழ்ச்சியையும், இதற்காக இந்த தூதுச் செய்தியைப் பரப்புவதற்கு நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். உங்களைப் பற்றி யாரும் தெரியாத இடத்தில் நீங்கள் பள்ளிவாசலைக் கட்டினால் உங்களது அறிமுகம் தாமாகவே ஏற்பட்டு விடும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அல்லாஹ்வின் அருளால் இந்த பள்ளிவாசல் இங்கு கட்டப்பட்டிருப்பது இந்தப் பகுதியில் இருந்த நாட்டில் ஜமாஅத் அறிமுகமாகிறது என்பதை அது நிரூபித்திருக்கின்றது. ஏக இறைவனை வணங்குகின்ற இடமாக பள்ளிவாசல்கள் இருக்கின்றன. இறைவனை உண்மையில் வணங்குபவர்கள் அவனது படைப்பினங்களுக்கு ஒருபோதும் தீங்கை விரும்பமாட்டார்கள் என்பதை இந்த மக்களுக்கு நாம் கூற வேண்டும்.

நமது ஒவ்வொரு இடங்களிலுள்ள பள்ளிவாசல்களும் இந்தப் பள்ளிவாசலும் எப்போதும் அமைதி, அன்பு, நேசம் ஆகியவற்றின் முழக்கங்களை எழுப்பும். இந்தப் பள்ளிவாசல் கட்டப்படுவதற்கான நோக்கத்தை நிறைவு செய்தவாறு நமது தக்வாவிலும் ஆன்மீகத்திலும் முன்னேறக்கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! நமது உள்ளங்களில் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பை உருவாக்க உள்ளம் நிம்மதி அடைவதற்கான வழிவகைகளைச் செய்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! நம்மில் ஒவ்வொருவரும் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றின் முன்மாதிரியாக திகழ்வோமாக.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

எந்த அளவு உங்களில் ஒருவர் மற்றவருடன் அன்பு கொள்வாரோ அந்த அளவு அல்லாஹ் உங்களுடன் அன்பு கொள்வான்.

நமக்கிடையே உள்ள அன்பில் முன்னேறுபவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! ஏனென்றால் எதுவரை நமக்கிடையே உள்ள அன்பில் நாம் உயர்ந்த தரத்தைப் பெறவில்லையோ அதுவரை

நாம் மற்றவர்களுக்கும் அன்பு பற்றிய சரியான போதனையை வழங்க முடியாது. அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

ஒரு வேதனை நிறைந்த செய்தி இருக்கின்றது. ஜுமுஆ தொழுகைக்கு பிறகு நான் ஒருவரது ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். மதிப்பிற்குரிய ஹமீது அஹ்மத் பட் சாஹிபின் மகன் மதிப்பிற்குரிய ஸவீர் அஹ்மத் பட் சாஹிப் அவர்கள் கராச்சியைச் சேர்ந்தவர். சிந்து மாகாணத்தில் வசிப்பவர். 1972 -ல் இவர் பிறந்தார். அங்கு F.A.வரை இவர் படித்தார். இவரது தாத்தாவான ஹாபிஸ் அப்துல் வாஹித் சாஹிப் ஸய்யதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் பாதுகாவலராக இருந்து வந்தார். அவரும் வாழ்க்கையை அர்ப்பணித்தவராவார். இவரது தந்தையார் வஸீராபாத்திலுள்ள தஃலீமுல் இஸ்லாம் ஸ்கூலின் ஆசிரியராக இருந்தார். செப்டம்பர் 25 ஆம் தேதி அடையாளம் தெரியாத சில நபர்கள் மதிப்பிற்குரிய ஸவீர் அஹ்மத் பட் சாஹிபின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். அதன் காரணமாக அவர் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் சிறந்த தைரியமிக்க போலீஸ் ஆக இருந்தார். ஒரு தொலைபேசி அழைப்பைக் கேட்டு இவர் மோட்டார் சைக்கிளில் சென்றார். அவர் செல்லும் வழியிலேயே இவர் மீது துப்பாக்கிச்சூடு செய்யப்பட்டது. நீண்ட காலமாக போலீஸின் Special Duty -ல் இவருக்கு தீவிரவாதிகள், போதைப் பொருள்கள் விற்பவர்கள் ஆகியோருக்கு எதிராக உள்ள குழுவில் இவர் இருந்து வந்தார். இந்தப் பணியில் இவர் பெரும் வெற்றிகளைப் பெற்றார். இதன் காரணமாகவே இவர் ஷஹீதாக்கப்பட்டுள்ளார் என்று தெரிகிறது. அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக!

அஹ்மதிகள தமது மார்க்கக் காரணத்திற்காகவும் பாகிஸ்தானில் ஷஹீதாகின்றார்கள். பொதுவாக சட்டம் சீர்குலைந்த நிலையில் அது செயல்படாமல் இருப்பதாலும் அஹ்மதிகளின் வாழ்க்கைக்கு அங்கு அபாயம் இருக்கின்றது. பிறகு எந்த அஹ்மதிகள் அரசாங்கத் துறைகளில் பணியாற்றுகின்றார்களோ, தங்களது கடமைகளை செய்கின்றார்களோ, நாட்டின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளைச் செய்கின்றார்களோ அவர்கள் நாட்டிற்காகவும் உயிரை தியாகம் செய்கின்றார்கள். இவ்வாறிருந்தும் அஹ்மதிகள் நாட்டின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்பவர்கள் அல்ல என்ற புகார் இருக்கின்றது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் எங்கு தைரியமிக்க நீதியை விரும்புகின்ற வீரமிக்க நபர் தேவைப்படுகின்றதோ அந்த இடங்களில் அந்த பணியை செய்ய அஹ்மதிகள் நியமிக்கப்படுகின்றனர். இந்த உயிர் தியாகம் நடந்த பிறகு போலீஸ் வந்து அவருக்கு மரியாதை செய்துள்ளது. தங்களது மரபிலுள்ள வழக்கத்திற்கேற்ப இவருக்கு அவர்கள் ஜனாஸா தொழுதார்கள். இவர் வஸிய்யத் செய்தவர். ரப்வாவில் இவர் நல்லடக்கம் செய்யப்பட்டார். ஆனால் முல்லாக்களும் பெயர்தாங்கிய ஆலிம்களும் அஹ்மதிகள் நாட்டின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்பவர்கள் அல்ல என்ற குற்றச்சாட்டை நம்மீது சுமத்துகின்றனர். மாறாக இன்று உண்மையான முறையில் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதின் உண்மையான முன்மாதிரியை அஹ்மதிகளால் மட்டும்தான் காட்ட முடியும். எவ்வாறிருப்பினும் நமது பணிகளை நாம் செய்து கொண்டே செல்ல வேண்டும். அல்லாஹ் இந்த மக்களுக்கும் அறிவையும், புரியும் திறனையும் வழங்குவானாக! அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக! இவர்களது மனைவி மக்களுக்கும் அல்லாஹ் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUN NASAR MOSQUE, NORWAY**

**ON 30.09.2011**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456